# PSLE FOUNDATION TAMIL LANGUAGE (0027)

# For Examination from 2017

## 1. மதிப்பீட்டின் நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட தொடக்கநிலைக்கான பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவர் அடையக்கூடிய மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். தொடக்கநிலைப் பள்ளிக் கல்வி இறுதியில் மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர்கள் பெற்றிருப்பர். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் அடிப்படைத் தமிழ்ப் பாடத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

1.1 கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழி மற்றும் எழுத்துவழி அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை மாணவர்கள் எந்த அளவிற்கு அடைந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிதல்

1.2 தொடக்கநிலை தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள கற்றல் விளைவுகளை மாணவர்கள் எந்த அளவிற்கு அடைந்திருக்கிறார்கள் என்பதை மதிப்பிடுதல்

## 2. தேர்வு அமைப்புமுறை

தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு அடிப்படைத் தமிழ் வினாத்தாள்கள் பின்வருமாறு அமையும்.

**<u>வினாத்தாள் 1</u>: (15 மதிப்பெண்கள், 15%)**

இத்தாள் ‘அ’, ‘ஆ’, ‘இ’ என்னும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது.

**‘அ’ பிரிவு: மொழிப் பயன்பாடு**

இப்பிரிவில் ஐந்து தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று தெரிவுகள் வழங்கப்படும். அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவேண்டும்.

**‘ஆ’ பிரிவு: வாசிப்புக் கருத்தறிதல்**

இப்பிரிவில் ஒரு பனுவலையொட்டி இரண்டு தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று தெரிவுகள் வழங்கப்படும். அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவேண்டும்.

**‘இ’ பிரிவு: நடைமுறை சார்ந்த பனுவல்**

இப்பிரிவில் ஒரு படவிளக்கக் கருத்தறிதல் பனுவல் இடம்பெறும். இதனையொட்டி மூன்று வினாக்கள் இடம்பெறும். முதலாவது வினா, தெரிவுவிடை வினா. இதற்கு மூன்று தெரிவுகள் வழங்கப்படும். அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவேண்டும். ஏனைய இரண்டும் சுயவிடை வினாக்கள். ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்பும் வகையில் நடைமுறை சார்ந்த பனுவலிலிருந்து சரியான விடையைக் கண்டறிந்து எழுதவேண்டும். ஒரு கோடிட்ட இடத்தில் ஒரு சொல்லை மட்டுமே விடையாக எழுதவேண்டும்.

**<u>வினாத்தாள் 2</u>: (55 மதிப்பெண்கள், 55%)**

இத்தேர்வு கீழ்க்காணும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியது:

1. வாய்விட்டு வாசித்தல்
2. உரையாடல்

**1. வாய்விட்டு வாசித்தல் (15 மதிப்பெண்கள், 15%)**

கணினித்திரையில் இடம்பெறும் ஓர் உரைநடைப் பகுதியை மாணவர் வாய்விட்டு வாசிக்கவேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசைநயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**2. ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் (40 மதிப்பெண்கள், 40%)**

கொடுக்கப்படும் ஒளிக்காட்சியைப் பயன்படுத்தித் தேர்வில் கலந்துகொள்வோர் அதனைப்பற்றி விவரித்துத் தேர்வாளரோடு உரையாடவேண்டும். அந்த ஒளிக்காட்சி ஏறக்குறைய 50-55 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும். ஒளிக்காட்சியைப் பற்றிய வருணனை ஓரிரு வாக்கியங்களில் அமைந்திருக்கும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலில் சரளம், மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**வினாத்தாள் 3: கேட்டல் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள், 30%)**

கேட்டல் கருத்தறிதல் தேர்வில் 15 தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவும் 3 தெரிவுகளைக் கொண்டிருக்கும். செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு, வினாவிற்கேற்ற சரியான படத்தைத் தேர்ந்தெடுத்தல் போன்ற தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். கேட்டல் கருத்தறிதல் தேர்வு குறும்பனுவல் வினாக்களையும் எதிருரை வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும். ஒரே தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெறவேண்டும் என்கிற அவசியமில்லை. இத்தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 35 நிமிடங்கள் ஆகும்.

## 3. தேர்வு விவர அட்டவணை

### தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு

### அடிப்படைத் தமிழ் (0027)

| **தாள் (நேரம்)** | **பொருளடக்கம்** | **வினா வகை** | **வினாக்களின் எண்ணிக்கை** | **மதிப்பெண் (மதிப்பளவு)** |
|---|---|---|---|---|
| 1 (40 நிமிடங்கள்) | **‘அ’ பிரிவு** | | | (15%) |
| | மொழிப் பயன்பாடு | தெரிவுவிடை | 5 | 5(5%) |
| | **‘ஆ’ பிரிவு** | | | |
| | வாசிப்புக் கருத்தறிதல் | தெரிவுவிடை | 2 | 4(4%) |
| | **‘இ’ பிரிவு** | | | |
| | நடைமுறை சார்ந்த பனுவல் | | | |
| | (அ) தெரிவுவிடை வினா | தெரிவுவிடை | 1 | 2(2%) |
| | (ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புதல் | சுயவிடை | 2 | 4(4%) |
| 2 (ஏறக்குறைய 10 நிமிடங்கள்) | **வாய்மொழி** | | | (55%) |
| | 1. வாய்விட்டு வாசித்தல் | சுயவிடை | 1 | 15(15%) |
| | 2. உரையாடல் (ஒளிக்காட்சியை ஒட்டி அமைதல்) | சுயவிடை | 1 | 40(40%) |
| 3 (ஏறக்குறைய 35 நிமிடங்கள்) | **கேட்டல் கருத்தறிதல்** | தெரிவுவிடை | 15 | 30(30%) |